செய்தி வெளியீடு எண்.863 நாள்: 20.11.2009

<u>கூட்ட நெரிசல் காரணமாக மேடைக்கு வர இயலாத சுய உதவிக்குழு மகளிர்க்கு விழா முடிவுற்ற நிலையிலும் மீண்டும் மேடைக்கு சென்று நிதி உதவிகளை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்.</u>

தமிழக துணை முதல்வர் மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல்நிதி, பொருளாதார நடவடிக்கைகளுக்கான மானியத்துடன் கூடிய கடனுதவி ஆகியவற்றை தொடர்ந்து வழங்கி வருகிறார். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் தொடர்ந்து நின்று கொண்டே இந்த நிதி உதவியை மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் அனைவருக்கும், அவர்கள் 3000, 4000 பேர் எனினும் தனது கரத்தாலேயே வழங்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் தானே அனைவருக்கும் வழங்கி வருகிறார்.

நேற்று (19.11.2009) அன்று தூத்துக்குடி மாவட்டத்தில், தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் இம்மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினை சேர்ந்த 1125 சுய உதவிக் குழுக்களுக்கு, சுழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடனாக ரூபாய் 7.87 கோடி வழங்கப்பட்டது. இதில் பேசிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எவ்வளவு நேரமானாலும் தானே அனைத்து குழுவினருக்கும் இந்த நிதி உதவியை வழங்க உள்ளதாக தெரிவித்தார். தூத்துக்குடி விழாவில், அனைத்து குழுவினருக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு இதர நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

விழா முடிவுற்ற நிலையில் மேடையை விட்டு மாண்புமிகு துணை முதல்வர் கீழே இறங்கிய போது கூட்ட நெரிசல் காரணமாக, மேடைக்கு வர இயலாத சுமார் 75 சுய உதவிக் குழுவினர் நிதி உதவி பெறாமல் மேடைக்கு அருகே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நிற்பதைப் பார்த்த துணை முதலமைச்சர் சுய உதவிக்குழு மகளிரிடம் விசாரித்த போது “தாங்கள் சுழல் நிதி பெற வந்திருப்பதாகவும், அந்நிதி உதவியினை துணை முதலமைச்சர் அவர்களின் கைகளால் நேரிடையாக பெற விரும்புவதாகவும்” தெரிவித்தனர். இதனை அறிந்த துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் உடனே மீண்டும் மேடைக்கு ஏறி சுழல் நிதி பெறாத மகளிர் அனைவரையும் அழைத்து தானே ஒவ்வொருவருக்கும் மீண்டும் 30 நிமிடங்கள் வரை நின்றவாறே அனைவருக்கும் சுழல்நிதியினை வழங்கினார். சுழல்நிதியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடமிருந்து நேரிடையாக பெற்ற மகளிரும், நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களும் இதனால் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.